## 1.Part II Scheme

### 1.21 1996–97 ஆர்.எஸ்.மங்கலம், திருவாடனை வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கான திருத்திய நிர்வாக அனுமதியும், கூடுதல் செலவினமான ரூ.10.34 இலட்சத்திற்கும், அனுமதி வழங்குதல்

---

ஊரக வளர்ச்சி (தி4) துறை

அரசாணை (நிலை) எண்.269 நாள் : 22.12.1999

படிக்க :

1. அரசு ஆணை (நிலை) எண்.184, ஊரக வளர்ச்சி(தி4)துறை, நாள் 3.9.96
2. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடிதம் எண்.87316/96/திட்டம் 2.2 நாள் 9.9.92 மற்றும் 26.8.99

**ஆணை**

1996–97ம் ஆண்டு பகுதி-II திட்டத்தில் ரூ.31.05 இலட்சம் அறுதியிட்ட செலவாக நிர்ணயித்து இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆர்.எஸ்.மங்கலம், திருவாடனை மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் சேதுபாவாசத்திரம் ஆகிய மூன்று வட்டாரங்களிலும் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டு, ரூ.15 இலட்சம் பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசானையில் வழங்கப்பட்டது. இத்தொகை ஊரக வளர்ச்சி இயக்குநரால் இராமநாதபுரம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களுக்கு தலா ரூ.7.50 இலட்சம் வீதம் வழங்கப்பட்டு விட்டது. இதில் தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கான குடியிருப்பு கட்டிடம் ரூ.7.50 இலட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டு விட்டது.

2. தற்போது கட்டிடம் கட்டும் கட்டுமானப் பொருட்களின் விலையேற்றத்தால், இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ். மங்கலம் மற்றும் திருவாடனை வட்டாரங்களில் வட்டார வளர்ச்சி அலுவலர் குடியிருப்புகளை கட்டிமுடிப்பதற்கு ஒரு வட்டாரத்திற்கு ரூ.8.92 இலட்சம் வீதம், மொத்தம் ரூ.17.84 இலட்சம் தேவைப்படுவதாகவும், ஏற்கனவே இப்பணிகளுக்கான ரூ.7.50 இலட்சம் வழங்கப்பட்டுவிட்டதால், எஞ்சிய ரூ.10.34 இலட்சத்திற்கு அரசு ஆணையும் ரூ.17.84 இலட்சத்திற்கு திருத்திய நிர்வாக அனுமதியும் வழங்குமாறு தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) கேட்டுக்கொண்டு உள்ளார். இதனை ஊரக வளர்ச்சி இயக்குநர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. அரசு இதனை நன்கு ஆய்வு செய்த பிறகு, மேலே பத்தி 2–ல் உள்ள ஊரக வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையினை ஏற்கலாம் என முடிவெடுத்துள்ளது. அவ்வாறே இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ். மங்கலம் மற்றும் திருவாடனை வட்டாரங்களில் வட்டார வளர்ச்சி அலுவலர் குடியிருப்புகள் தலா ரூ.8.92 இலட்சம் வீதம், மொத்தம் ரூ.17.84(ரூபாய் பதினேழு லட்சத்து எண்பத்து நாலாயிரம் மட்டும்) கட்டிமுடிப்பதற்கான திருத்திய நிர்வாக அனுமதி அளித்தும் கூடுதல் தொகையான ரூ.10.34 இலட்சத்தினை(ரூபாய் பத்து லட்சத்து முப்பத்து நாலாயிரம் மட்டும்)விடுவித்தும் 1999–2000ம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதியாக திருத்தப்படும் மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்வதை எதிர்நோக்கி ஆணை வெளியிடப்படுகிறது.

4. 1999–2000ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய நிதி ஒதுக்கீட்டில் சேர்ப்பதற்கான கருத்துரு அனுப்புகையில் மேலே அனுமதிக்கப்பட்ட தொகையையும் தவறாது சேர்த்து அரசின் நிதித்துறைக்கு (PWD.I) ஊரக வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. மேலே அனுமதிக்கப்பட்ட தொகையினை ஊரக வளர்ச்சி இயக்குநர் பெற்று மேற்படி பணியினை செய்து முடிக்க ஏதுவாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு வழங்க அனுமதி அளிக்கப்படுகிறது.

6. மேலே பத்தி 3–ல் அனுமதிக்கப்பட்ட தொகையினை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

“4515 00 – ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்து மூலதனச் செலவு – 102 சமுதாய நல வளர்ச்சி – ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் – II மாநிலத் திட்டம் ஜே.ஏ. கட்டிடங்கள் 16 பெரும் பணிகள்“ (டி.ப்பி. குறியீட்டு எண். 4515 00 102 ஜே.ஏ. 1602)

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 95826/ஊரக வளர்ச்சி/99–1, நாள் 19.12.99. ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்